இனிமையான குழந்தைகளே! சிறிது தவறு செய்தாலும் கூட ஈஸ்வரிய தொடர்பிலிருந்தே தூரம் சென்றுவிடும்படியாக மாயை விழுங்கிவிடும். ஆகையினால், தன்னைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

கேள்வி: இந்த ஈஸ்வரிய வகுப்பில் அமர்வதற்கான நியமம் என்ன?

பதில்: யார் தந்தையை சரியாக அறிந்திருக்கிறார்களோ, அவர்களே இந்த வகுப்பில் அமர முடியும். இங்கே அமரக்கூடியவர்களுக்கு கலப்படமற்ற நினைவு இருக்க வேண்டும். ஒருவேளை, இங்கே அமர்ந்துகொண்டு பிறரை நினைவு செய்துகொண்டு இருந்தால் அது வாயுமண்டலத்தைக் கெடுத்துவிடுகிறது. இது கூட மிகப்பெரிய அபகாரம் (டிஸ்சர்வீஸ்) ஆகும். இங்கே உள்ள நியமங்கள் கடுமையாக இருக்கும் காரணத்தினால், உங்களுடைய வளர்ச்சி குறைவாக உள்ளது.

கேள்வி: எந்த ஒரு விசயத்தின் மூலம் குழந்தைகளுடைய நிலை தெரியவருகிறது?

பதில்: இந்த நோயாளிகள் நிறைந்த, அல்பகால சுகத்தை அனுபவிக்கும் உலகத்தில் எப்பொழுதாவது ஏதாவது பரீட்சை வருகிறது மற்றும் அழ ஆரம்பித்துவிடுகின்றனர் என்றால் ஒருவரின் நிலை தெரிந்துவிடுகிறது. உங்களுக்கு அழுவதற்குத் தடை உள்ளது.

பாடல்: முகத்தைப் பார் ஆத்மாவே

ஓம்சாந்தி. பிராணனே அல்லது ஆத்மாவே என்று கூறியது யார்? இவருடைய பிராணன் பிரிந்து விட்டது என்று கூறுகிறார்கள் அல்லவா ! எனில், ஆத்மா பிரிந்துவிட்டது அல்லவா! எனவே, பிராணன் என்று ஆத்மாவைத் தான் சொல்வார்கள், சரீரத்தை அல்ல.. நீங்கள் பாவ ஆத்மாவா அல்லது புண்ணிய ஆத்மாவா? என்று தந்தை ஆத்மாக்களிடம் கேட்கின்றார். அனைவரும் தன்னை தூய்மையற்றவர்கள் என்று ஏற்றுக்கொள்கின்றனர். எனவே, நான் என்னென்ன பாவம் செய்திருக்கிறேன்? எப்பொழுது செய்திருக்கிறேன்? என்பதை தனது ஆத்மாவிடம் கேளுங்கள் என்று தந்தை கூறுகின்றார். அனைவருமே பாவ ஆத்மாக்கள் அல்லவா! ஆனால், வரிசைக்கிரமமாக உள்ளனர். வரிசைக்கி ரமமான புண்ணிய ஆத்மாக்கள் யார்? முதல் எண்ணில் உள்ள பாவ ஆத்மா யார்? பாரதம் பாவனமாக இருந்தது. இப்பொழுது பதீதமாக இருக்கின்றது. இன்று அனைத்து மனிதர்களும் மாயையின் அடிமை ஆகிவிட்டனர். அரைக்கல்பமாக மாயையின் அடிமை ஆகின்றனர். பிறகு, மாயையை அடிமை ஆக்குகின்றனர். ஆகையினாலேயே அவர்களை புண்ணிய ஆத்மா என்று கூறப்படுகிறது. இலட்சுமி, நாராயணரை பகவான், பகவதி என்று கூறப்படுகிறது. அவர்கள் இப்பொழுது எங்கே சென்றுவிட்டனர்? சத்யுகத்தில் இலட்சுமி, நாராயணர் மட்டும் இல்லை. ஆனால், அவர்களுடைய முழு வம்சமும் இருந்தது. அந்த சமயத்தின் பாரதத்தை தூய்மையான பாரதம் என்று கூறப்பட்டது. அங்கே தெய்வீக குணங்களை உடைய மனிதர்கள் இருந்தனர். சர்வகுண சம்பன்னம் (நிறைந்தவர்), 16 கலைகள் சம்பூரணம் (முழுமையானவர்) என்று கூறுகின்றனர் எனில், புண்ணிய ஆத்மாவாக இருக்கின்றனர் அல்லவா! பிறகு, அஹிம்சா பரமோதர்மம் என்று கூறுகின்றனர். எனவே, அவர்கள் அஹிம்சை வழியில்

நடப்பவர்களாக இருந்தனர். ஹிம்சை என்ற வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. ஹிம்சை என்றால் ஒருவரை வதைப்பது, கொலை செய்வது. கொலை கூட இரண்டு விதம் உள்ளன. ஒன்று காமக் கோடரியால் கொலை செய்வது, இரண்டாவது ஒருவரை கோபத்தினால் கொலை செய்வது. இது கூட ஹிம்சை ஆகும். இந்த சமயத்தில் அனைவரும் பாவ ஆத்மாக்களாக உள்ளனர். குணங்களற்ற எங்களுக்குள் எந்த குணமும் இல்லை என்று கூறுகின்றனர் அல்லவா! எனவே, வரிசைக்கிரமமாக உள்ளனர் அல்லவா! ஆனால், அவர்கள் பாவ ஆத்மாக்கள் ஆவர். எப்பொழுது தந்தை வருகின்றாரோ, அப்பொழுது தந்தையை அறிந்து கொள்ள வேண்டும். பரமபிதா என்று கூறுகின்றனர் எனில், அவருக்கு தந்தை என்று யாரும் கிடையாது, அவர் அனைவருடைய தந்தை ஆவார். அவர் அனைவருடைய ஆசான் ஆவார். பரமபிதா யார் பரந்தாமத்தில் இருக்கின்றாரோ அவருக்கு தந்தை யாரும் கிடையாது. மற்ற அனைவருக்கும் தந்தை இருக் கின்றார்கள். பிரம்மா, விஷ்ணு, சங்கரருக்குக் கூட தந்தை இருக்கின்றார். சிவாய நமஹ என்று கூறுகின்றனர் எனில், அவர் தந்தையாகிவிட்டார் அல்லவா! தந்தை மறுபிறவி எடுப்பதில்லை. ஆனால், கல்பத்தில் ஒருமுறை பிறப்பெடுக்கின்றார். சிவஜெயந்தி என்று கூறுகின்றனர் எனில், பிறவி எடுத்ததாக ஆகிவிட்டது அல்லவா! சிவன் எவ்வாறு பிறப்பு எடுக்கின்றார்? என்பதை சாஸ்திரவாதிகள் அறியவில்லை. சிவராத்திரி என்று கூறுகின்றனர் எனில், எந்த இராத்திரி? இராத்திரியில் மனிதர்கள் இருட்டுக்கு வசமாகி ஏமாற்றத்தை அடைகிறார்கள். பிறகு, பக்தி மார்க்கத்தில் கூட கங்கை ஸ்நானம் செய்யுங்கள், நான்கு தாமங்களின் யாத்திரை செய்யுங்கள், இதைச் செய்யுங்கள் என்று கூறுகின்றனர். இது ஏமாற்றம் அடைந்ததாக ஆகிவிட்டது அல்லவா! இது இரவு ஆகிவிட்டது. சத்யுக, திரேதாயுகம் பகல் ஆகும். சத்யுத்தில் சுகம் உள்ளது. அங்கே பரமாத்மாவை நினைவு செய்வதற்கான அவசியம் இல்லை. துக்கத்தில் அனைவரும் நினைவு செய்வார்கள் என்று கூறுகின்றனர். பக்தர்கள் தந்தையை நினைவு செய்கின்றனர், தவம் செய்கின்றனர் எனில், பதீதமாக இருக்கின்றனர் என்று அர்த்தம் ஆகிறது அல்லவா! எனவே, பாரதத்தையே பதீதமானது என்று கூறுவார்கள். ஏனெனில், பாரதம் தான் பாவனமாக இருந்தது. எப்பொழுது தேவி, தேவதை தர்மம் இருந்ததோ அப்பொழுது தூய்மையான ஆத்மாக்கள் இருந்தனர். சத்யுகத்தில் வேறு தர்மம் கிடையாது. மற்றபடி, மற்ற தர்மங்களைச் சேர்ந்த பதீத ஆத்மாக்கள் தண்டனைகள் அடைந்துவிட்டு பரந்தாமத்தில் இருப்பார்கள். சத்யுகத்திற்கு வர மாட்டார்கள். சத்யுகத்தில் சுகம், சாந்தி, செல்வம் ஆகிய அனைத்தும் இருந்தது. அங்கே இருப்பதோ பிராப்தி ஆகும்.

இப்பொழுது இங்கே குழந்தைகளாகிய உங்களுடைய வழி ஒரே வழி ஆகும். அங்கே ஒரு வீட்டில் இருக்கின்றனர், ஆனால், அனேக வழிகள் உள்ளன. தந்தை கணேசரை நினைவு செய்வார் என்றால் மகன் ஹனுமானை நினைவு செய்வார், எனில், அனேக வழிகள் ஆகிவிட்டன அல்லவா! இங்கே தந்தையிடமிருந்து குழந்தைகளுக்கு ஆஸ்தி கிடைக்கின்றது. இங்கே யாரை வேண்டுமானாலும் பாபா என்று கூறிவிடுகின்றனர். காந்தி கூட பாபு (தந்தை) என்று அழைக்கப்பட்டார் அல்லவா! ஆனால், அனைவருடைய தந்தை கிடையாது. இவர் எல்லையற்ற தந்தை ஆவார். தந்தை வந்து சங்கிலிகளி லிருந்து விடுவிக்கின்றார். பக்தி என்பது கூட சங்கிலிகள் ஆகும். நாம் பதீதமாக இருக்கின்றோம் என்பதை புரிந்திருக்கவில்லை. பதீதமானவர்களை

பாவனமாக்கக் கூடியவர் ஒரு தந்தை ஆவார். நீங்கள் ஒரு சத்தியமான தந்தையை ஏற்றுக்கொண்டு இருக்கிறீர்கள். மற்ற சத்சங்கத்திற்குச் சென்றால் எவரும் தடை செய்வதில்லை. இங்கேயோ முற்றிலும் தடை விதிக்கப்படுகிறது. எதுவரை தந்தையை அறியவில்லையோ, அதுவரை வகுப்பில் அமர முடியாது. ஏனெனில், எதுவரை நினைவு இல்லையோ, அதுவரை தகுதியானவர் ஆகவில்லை. மாயை தகுதியற்றவர் ஆக்கிவிடுகிறது. குணங்களற்ற எங்களுக்குள் எந்த குணமும் இல்லை என்று கூறுகின்றனர். இதை அனைவரும் பாடுகின்றனர். எனில், அனைவரும் பதீதமாக உள்ளனர். பிரம்மா, விஷ்ணு, சங்கரரையும் நிந்தனை செய்கின்றனர். அவர்களுக்கு திருஷ்டி (பார்வை) எவ்வாறு உள்ளதோ அவ்வாறு சிருஷ்டி தென்படு கிறது. ஒருவேளை, ஒருவர் இங்கே அமர்ந்துகொண்டு பிறரை நினைவு செய்துகொண்டு இருக்கிறார் என்றால் அது கலப்படமான நினைவு ஆகி விட்டது அல்லவா ! நினைவு முழுமையாக இல்லை. ஏனெனில், மாயை புத்தியின் தொடர்பை துண்டித்துவிடுகிறது. பிறகும் கூட தந்தை உங்களுக்கு புத்தியின் தொடர்பை ஈடுபடுத்துவதற்குக் கற்பிக்கின்றார். இறுதியில் உங்களுக்கு நினைவு நிலையாக இருக்கும். எனவே, அதீந்திரிய சுகத்தைப் பற்றி கேட்க வேண்டும் என்றால் கோப, கோபியர்களிடம் கேளுங்கள் என்று இறுதி நேரத்திற்கான மகிமை பாடப்படுகின்றது. இங்கே உள்ள நியமங்கள் கடுமையாக இருக்கும் காரணத்தினால் இந்த அமைப்பு வளர்ச்சியடையவில்லை. எதுவரை தந்தையை அறியவில்லையோ, அதுவரை வகுப்பில் அமர முடியாது, ஏனெனில், இங்கே கலப்பட மற்ற நினைவு தேவை. எவரும் சத்திய கண்டத்திற்கு எஜமானராக ஆக்க முடியாது. நீங்கள் சத்திய கண்டத்திற்கு எஜமானராக தந்தையின் மூலம் ஆகின்றீர்கள். இப்பொழுதோ பொய்யான கண்டமாக உள்ளது. பொய்யான சரீரம், பொய்யான மாயை என்று கூறுகின்றனர் அல்லவா! அரைக்கல்பம் அவ்வாறே நடைபெறுகிறது. தந்தை ஞானத்திற்கு வருகிறார் என்றால் படைப்பையும் கூட பாவனம் ஆக்க வேண்டும். ஒருவேளை, குழந்தைகள் தூய்மை ஆக வில்லை எனில், கெட்ட குழந்தைகள் ஆவார்கள். வீட்டில் ஒருவேளை, ஒருவர் தூய்மை ஆகின்றார், இன்னொருவர் ஆகவில்லை எனில், சண்டை ஏற்படுகின்றது. ஆகையினால், மனிதர்களுடைய இருதயம் உடைந்து போய்கிறது. இங்கே கேட்கும்பொழுது நன்றாக உள்ளது, நன்றாக உள்ளது என்று கூறுகின்றனர். ஆனால், பிறகு வெளியில் சென்றவுடன் முன்பிருந்ததைப் போல் ஆகிவிடுகின்றனர். இல்லறத்தில் இருந்துகொண்டு தூய்மையாக ஆக முடியாது என்று சந்நியாசிகளே கூறுகின்றனர். எனில், நாங்கள் எவ்வாறு இருக்க முடியும்? என்று நினைக்கின்றனர். ஆனால், இங்கேயோ உறுதிமொழி செய்தாக வேண்டும். நாங்கள் தூய்மையாக ஆவோம் என்று குழந்தைகளும் கூறுகின்றனர். சத்கதியை வழங்கும் வள்ளலே வாருங்கள்! என்று அரைக் கல்பமாக நாம் அழைத்து வந்தோம். இப்பொழுது அவர் வந்திருக்கின்றார். எனில், இப்பொழுது அவர் சொல்வதை ஏற்றுக்கொள்வீர்களா? அல்லது பிறர் சொல்வதை ஏற்றுக் கொள்வீர்களா? ஒருவேளை, ஏற்றுக்கொள்ளவில்லை எனில் சத்யுகத்திற்கு எவ்வாறு செல்ல முடியும்? என்று தந்தை கூறுகின்றார். ஒருவேளை, தந்தையினுடைய குழந்தை இல்லை எனில் கெட்ட குழந்தைகள் ஆவார்கள் அல்லவா! பிறகு, அவர்களால் நிலைத்திருக்க முடியாது. அவர்கள் இருப்பதே கஷ்டம் ஆகிவிடும். அன்னம் மற்றும் கொக்கு என்றிருந்தால் எவ்வாறு சேர்ந்திருக்க முடியும்? நல்லது. சில இடத்தில் மனைவி தூய்மை ஆகின்றார். கணவன் தூய்மை ஆகவில்லை எனில் மனைவி (பாபாவை)

உதவிக்கு அழைக்கின்றார். குழந்தைகளே! நீங்கள் சகித்துக்கொள்ளத்தான் வேண்டும். நல்லது, சென்று வேலை செய்யுங்கள், பாத்திரம் தேயுங்கள், துண்டு ரொட்டியாவது தேவை அல்லவா! விகாரத்தில் செல்வதை விட பாத்திரம் தேய்ப்பது நல்லது அல்லவா! என்று தந்தை கூறுகின்றார். பெண் குழந்தைக்கு லௌகீக தந்தை கூட அடைக்கலம் தருவதில்லை. விகாரத்திற்கு செல்வதற்காகவே நாம் உங்களுடைய கரம் பிடித்துக் கொடுத்திருக்கிறோம் என்று அவரும் கூறிவிடுவார். ஆனால், தானம் கொடுத்தீர்கள் என்றால் கிரஹணம் நீங்கிவிடும் என்று பரலௌகீக தந்தை கூறுகின்றார். 5 விகாரங்களின் தானம் கொடுங்கள், அப்பொழுது கிரஹணம் நீங்கிவிடும். சந்திரன் போன்று 16 கலைகளில் முழுமையானவர்கள் ஆகிவிடுவீர்கள். ஸ்ரீகிருஷ்ணர் 16 கலைகளில் முழுமையானவராக இருக்கின்றார் அல்லவா. இப்பொழுதோ எந்தக் கலையும் இல்லை. இப்பொழுதோ அனைவரும் பதீதமாக உள்ளனர். நாங்கள் பதீதமாக இருக்கின்றோம் என்று கூறுகின்றனர். அவர்களிடம் நீங்கள் நரகவாசிகளாக இருக்கிறீர்கள் என்று கூறினால் கோபித்துக் கொள்வார்கள். இந்த சமயத்தில் இராஜா, பிரஜைகள் ஆகிய அனைவரும் பதீதமாக உள்ளனர். சத்யுகம் சிரேஷ்டமானது ஆகும். சத்யுகத்தில் எவரும் அழுவதில்லை. எனவே, உங்களுக்கு இங்கேயும் கூட அழுவதற்கான அனுமதி கிடையாது. அழுகிறீர்கள் எனில் மனோநிலையின் (அவஸ்தா) குறைபாடு உள்ளது என்று அர்த்தம். தந்தை 21 பிறவிகளுக்கான அரசாட்சியைக் கொடுக்கின்றார் எனில், பிறகு, அழுவதற்கான அவசியம் என்ன உள்ளது? ஆனாலும் இதை மறந்துவிடுகிறீர்கள். இது நோயாளி உலகம், அல்பகால சுகத்தை அனுபவிக்கும் உலகம் ஆகும். சத்யுகம் நோயற்ற யோகி உலகம் ஆகும். இங்கேயோ தந்தையை நினைவு செய்ய வேண்டும். நினைவு செய்யவில்லை எனில் அபகாரம் (டிஸ்சர்வீஸ்) செய்கிறீர்கள் என்று அர்த்தம். ஏனெனில், வாயுமண்டலத்தை கெடுத்துவிடுகிறீர்கள். இங்கேயோ அனைவரும் பதீதமானர்களாக உள்ளனர். எனவே, பதீதமானவர்களுக்கு தானம் செய்வதனால் பாவனம் ஆக முடியாது. பதீதமானவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் பதீதமான வேலையையே செய்வார்கள். இங்கேயோ பதீதமானவர்களுடன் பதீதமானவர்களுடைய தொடர்பு இருக்கிறது.. அங்கேயோ பாவனமானவர் களுடன் பாவனமானவர்களின் தொடர்பு இருக்கும். விபச்சாரி என்ற வார்த்தை மோசமானது அல்லவா! முதலில் பக்தி கூட கலப்படமற்றதாக இருந்தது. சிவனுடைய பூஜை மட்டுமே செய்தனர். பிறகு, தேவதைகளின் பக்தியை ஆரம்பம் செய்தனர். பின்னாளில் செய்யப்பட்ட பக்தி ரஜோகுண பக்தி என்று கூறப்படுகிறது இப்பொழுதோ மனிதர்களின் பூஜை செய்யத் துவங்கிவிட்டனர். சந்நியாசிகளின் பாதங்களைக் கழுவிப் பருகுகின்றனர். மனிதர்களின் பூஜையை பூத பூஜை என்ற கூறப்படுகின்றது. அதாவது 5 தத்துவங்களால் ஆக்கப்பட்ட சரீரத்திற்கு பூஜை செய்யப்படுகின்றது. எதையுமே புரிந்துகொள்ளவில்லை. ஆகவே, கண் இழந்தவரின் மகன் கண் இழந்தவர் ஆவார் என்று கூறப்படுகின்றது. நீங்கள் பார்வை உடையவரின் குழந்தைகள் பார்வை உடையவர்கள் ஆவீர்கள். எனவே, அவர்கள் இருளில் ஏமாற்றத்தை அடைந்துகொண்டு இருக்கின்றனர். குரு பிரம்மா, குரு விஷ்ணு, குரு சங்கரர் என்று கூறுவது கூட தவறு ஆகும் என்று கூறுகின்றார். விஷ்ணுவோ சத்யுகத்தில் இருக்கக்கூடியவர். அவர் தன்னுடைய பிராப்தியை அனுபவிக்கின்றார். மற்றபடி, பிரம்மா குரு ஆவார், அது கூட எப்பொழுது இந்த உடலில் தந்தை வருகின்றாரோ அப்பொழுதே குரு ஆகின்றார். எதுவரை தந்தை

வரவில்லையோ, அதுவரை இவரால் கூட என்ன பயன்?

யார் என்னுடைய ஸ்ரீமத்படி நடக்கின்றார்களோ அவர்களே என்னுடைய நல்ல குழந்தைகள் ஆவார்கள் என்று எல்லையற்ற தந்தை கூறுகின்றார். எவ்வாறு அரசாங்கம் சட்டம் போடுகிறதோ, அவ்வாறு இந்த பாண்டவ அரசாங்கம் கூட - தூய்மை ஆனீர்கள் என்றால் தூய்மையான உலகத்தின் எஜமானர்கள் ஆகிவிடுவீர்கள் என்ற சட்டம் போடுகின்றது. தேகம் உட்பட தேகத்தின் அனைத்து சம்பந்தங்களையும் மறந்து என் ஒருவரை மட்டும் நினைவு செய்யுங்கள் என்று தந்தை கூறுகின்றார். இந்த சரீரத் திலிருந்து புத்தியின் தொடர்பை துண்டிக்கச் செய்கின்றார் மற்றும் ஆத்மாவிற்கு பரமாத்மாவுடன் நிச்சயதார்த்தம் செய்விக்கின்றார். எனவே, தந்தையை நினைவு செய்ய வேண்டும் மற்றும் சரீரத்திலிருந்து பற்றை விலக்க வேண்டும். மோகஜீத் (பற்றை வென்றவர்) இராஜாவின் ஒரு கதை உள்ளது அல்லவா! எனவே, நீங்கள் கூட மோகஜீத் ஆக வேண்டும். இது யுத்த மைதானம் ஆகும். இந்த யுத்தத்தில் சிறிது கவனக்குறைவாக இருந்தாலும் கூட மாயை விழுங்கிவிடும். யானையை முதலை பிடித்துக் கொண்டது என்று கூறுகின்றனர். கஜேந்திரன் அதாவது யானை தண்ணீரில் சென்றது, முதலை பிடித்துவிட்டது என்பது போன்ற விசயம் எதுவும் கிடையாது. இது இங்கே உள்ள விசயம் ஆகும். நல்ல நல்ல மகாரதியாக இருக்கின்றனர், அனேகருக்குப் புரியவைக்கவும் செய்கின்றனர், சென்டர்களையும் பராமரிக்கின்றனர். ஒருவேளை, அவர்கள் கூட சிறிது கவனக்குறைவாக இருந்தார்கள் என்றால் மாயை விழுங்கிவிடுகிறது. தந்தையினுடைய தொடர்பிலிருந்தே விலக்கி அழைத்துச் சென்றுவிடும் அளவிற்கு விழுங்கி விடுகிறது. பழைய உலகத்திற்குச் சென்றுவிடு கின்றனர். ஆகையினால், மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஏனெனில், மாயையுடன் குத்துச் சண்டை நடைபெறுகின்றது. மேலும், இவை முற்றிலும் புரிந்துகொள்வதற்கான விசயங்கள் ஆகும். சத்தியம், சத்தியம் என்று மட்டும் சொல்வதற்கான விசயம் கிடையாது. சத்தியம், சத்தியம் என்று பக்தி மார்க்கத்தில் சொல்கின்றனர். இன்னார் மூக்கிலிருந்து பிறந்தார், இதுவும் சத்தியம், ஹனுமான் காற்றிலிருந்து பிறந்தார், ஆம் இதுவும் சத்தியம், இவ்வாறு சத்தியம், சத்தியம் என்று பக்தி மார்க்கத்தில் சொல்கின்றனர். அவை அனைத்தும் பக்திமார்க்கத்தின் விசயங்கள் ஆகும். இங்கேயோ ஞானத்தின் விசயங்கள் ஆகும், அவற்றை தாரணை செய்ய வேண்டும். மாயையுடன் யுத்தம் செய்ய வேண்டும். ஒருவேளை, தந்தை யினுடையவர் ஆனபிறகு ஏதாவது பாவ காரியம் செய்தால் மேலும் நூறு மடங்கு தண்டனை கிடைக்கும். எனவே, பாபா மிகுந்த எச்சரிக்கை செய்கின்றார். பாருங்கள்! இப்பொழுது பாப்தாதா எதிரில் அமர்ந்து கற்பித்துக்கொண்டு இருக்கின்றார். இப்பொழுது ஹே பகவான்! என்று கூறுவீர்களா என்ன? இல்லை. சிவபாபாவின் குழந்தை ஒரு பிரம்மா ஆவார். பிறகு, பிரம்மாவே விஷ்ணு ஆகின்றார். நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகு காலத்திற்குப் பிறகு தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தை பாப்தாதாவினுடைய அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்காக முக்கியமான சாரம்:

1. சந்திரனுக்கு சமமாக 16 கலைகளில் சம்பன்னம் (நிறைந்தவர்) ஆகுவதற்காக 5

விகாரங்களை முழுமையாக தானம் கொடுத்துவிட்டு கிரஹணத்திலிருந்து விடுபட வேண்டும்.

2. தந்தையினுடையவர் ஆனபிறகு எந்த பாவ கர்மமும் செய்யக் கூடாது. சரீரத்திலிருந்து கூட பற்றை நீக்கி மோகத்தை (பற்றை) வென்றவர் ஆக வேண்டும்.

வரதானம் : தனது உயர்ந்த பார்வை, உள்ளுணர்வின் மூலம் உலகத்தை மாற்றம் செய்யக்கூடிய உலகத்திற்கு ஆதாரமானவர் ஆகுக.

உலகத்திலுள்ள அனைத்து ஆத்மாக்களுக்கும் குழந்தைகளாகிய நீங்கள் தான் ஆதார மூர்த்தியாக இருக்கிறீர்கள். உங்களுடைய சிரேஷ்ட உள்ளுணர்வின் மூலம் உலகத்தின் சூழ்நிலையை மாற்றம் அடைந்துக் கொண்டிருக்கிறது. உங்களுடைய தூய்மையான பார்வையினால் உலகத்திலுள்ள ஆத்மாக்கள் மற்றும் இயற்கை இரண்டும் தூய்மை ஆகி கொண்டிருக்கிறது. உங்களுடைய திருஷ்டி யினால் உலகம் மாற்றம் அடைந்துக் கொண்டிருக்கிறது. உங்களுடைய சிரேஷ்ட காரியத்தினால் சிரேஷ்டச்சாரி (மிக உயர்ந்த) உலகம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட பொறுப்பினுடைய கீரிடம் சூடக் கூடிய குழந்தைகளாகிய நீங்கள் தான் எதிர்காலத்தின் கீரிடதாரி ஆகிறீர்கள்.

சுலோகன்: விடுப்பட்டவராகவும் அதிகாரியாகவும் ஆகி செயல்கள் செய்தீர்கள் என்றால், எந்தவொரு பந்தனமும் உங்களை பந்தனத்தில் சிக்குவிக்க முடியாது.